2014 பிப்ரவரி 17] [திரு. டி.கே.எம். சின்னையா]

நோய் மழைக் காலங்களில் வழக்கமாக வரக்கூடியதுதான். புதியதாக வந்த நோய் அல்ல. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாடுகள் மொத்தம் 12,350 தான். அதில் 447 மாடுகள்தான் அங்கே இறந்திருக்கின்றன என்பதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கின்றேன். அரசியல் கட்சித் தலைவர்களும், பத்திரிகைகளும்தான் அதைப் பெரிதுபடுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையினால், இதுவரையில் இல்லாத அளவிற்கு 220 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டதால், அந்த நோய் ஒரே மாதத்தில் கட்டுக்குள் வந்துவிட்டது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்தோடு இங்கு பேச வேண்டும். இப்படி ஆதாரம் இல்லாமல் இங்கே பேசக்கூடாது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 18-2-2014 (செவ்வாய்க்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. 2011-2012ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. 2014-2015 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு-செலவுத் திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்).

4. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

5. 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.